பக்கங்கள் 15+2

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 07 திங்கட்கிழமை 22.12.2025 | அதிர்வு 145

## ஜெய்சங்கர் நாளை இலங்கை விஜயம்!



இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நாளை செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று இந்திய வெளிவிவகார 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# “தையிட்டி எங்கள் சொத்து; விகாரையை உடன் அகற்று!”

## திட்டமிட்ட கைதுகளை நிறுத்துமாறும் யாழ். பல்கலை மாணவர்கள் போராட்டம்






(எஸ்.நிதர்ஷன்)

யாழ். தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இன்று பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 04▶



## அம்பலாங்கொடையில் ஒருவர் சுட்டுக்கொலை!

அம்பலாங்கொடையில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

அம்பலாங்கொடை பகுதியில் உள்ள கடையின் ஒன்றின் முகாமையாளரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அந்தப் பகுதியை விட்டுத் தப்பிச் சென்றனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இரண்டு குழுக்களுக்கிடையிலான தகராறினால் இடம்பெற்றதுஎன்றுபொலிஸ்விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்குத் துப்பாக்கிதாரியால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் அம்பலாங்கொடை குருந்துவத்த – அந்ததோல வீதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது என்று தெரிவித்த அம்பலாங்கொடை பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கரைதுறைப்பற்று பிரதேச சபையை கைப்பற்றியது தேசிய மக்கள் சக்தி!

## புதிய தவிசாளராக இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச சபையைத் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

நடந்து முடிந்த முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் அடிப்படையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 03▶





உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# தையிட்டியில் பொலிஸாரின் அராஜகம்: தமிழ் மக்கள் கூட்டணி கடும் கண்டனம்!



**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ். தையிட்டியில் பொலிஸார் நடந்து கொண்ட விதம், நாடு இரண்டாகப் பிளவுபட்டுள்ளது என்பதைப் பட்டவர்த்தனமாகக் காட்டி நிற்கின்றது எனத் தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தையிட்டி விகாரை முன்பாக நடைபெற்ற அமைதிவழிப் போராட்டத்தின் போது, பொலிஸார் இடையூறுகளை ஏற்படுத்தி அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர்.

மதகுருவான வேலன் சுவாமியை மிலேச்சத்தானமாகத் தாக்கி, அவரைக் காட்டுமிராண்டித்தனமாக இழுத்துச் சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றியுள்ளனர்.

அதேவேளை மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனையும் தள்ளி விழுத்தியுள்ளனர். அத்துடன் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் மூவர் உள்ளிட்ட நால்வரை அடித்து இழுத்துச் சென்று பொலிஸ் வாகனத்தில் ஏற்றி அராஜகம் செய்துள்ளனர்.

பொலிஸாரின் இந்த அராஜகத்தை தமிழ் மக்கள் கூட்டணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பொலிஸாரின் இந்தச் செயற்பாடானது நாடு இரண்டாகப் பிளவுபட்டு உள்ளமையையே காட்டி நிற்கின்றது. எத்தனை ஆட்சிகள் மாறினாலும், சிங்கள பௌத்த தீவிரவாத போக்கில் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

திருகோணமலையில் புத்தர் சிலையை வைத்தமை தொடர்பான பிரச்சினையின்போது பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் அதிகாரியைக் கன்னத்தில் அறைந்தார். அதற்கு எதிராக பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காது அமைதி காத்தனர். ஆனால், தையிட்டியில் நின்ற பொலிஸார், வேலன் சுவாமிகளை மிலேச்சத்தானமாகத் தாக்கி கைது செய்துள்ளனர். வேலன் சுவாமி ஒரு பௌத்த பிக்குவாக இல்லாதமைதான் இதற்குக் காரணம். வேலன் சுவாமிகளுடன் நடந்து கொண்டது போன்று ஒரு பௌத்த பிக்குவுடன் பொலிஸாரினால் நடந்து கொள்ள முடியுமா ??

வேலன் சுவாமி, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் தம் மீது பொலிஸார் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும் என வலியுறுத்துகின்றேன்.

அவர்கள் அவ்வாறு பொலிஸாருக்கு எதிராக வழக்குத் தொடர விரும்பின் சட்டத்தரணி என்ற ரீதியில் நாமும் எமது கட்சியும் பக்க பலமாக அவர்களுக்காக நிற்போம் என இவ்விடத்தில் உறுதி கூறுகின்றேன்.

அதேவேளை, வலிகாமம் வடக்கு பிரதேச சபையிடமும் அன்பான கோரிக்கை ஒன்றை விடுகின்றேன், உங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் சாதாரண குடிமகன் ஒரு கட்டடத்தை அமைக்கும் போது , பிரதேச சபையின் அனுமதி பெறாதுவிடின் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கின்றீர்கள், அதேபோன்று தையிட்டி விகாரையில் நடைபெறும் சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகின்றேன்.” – என்றார்.



# ஜனவரி மாதமே ரில்வின் இந்தியா பயணம்?

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா எதிர்வரும் ஜனவரி மாதமே இந்தியா செல்லவுள்ளார் என்று அறியவருகின்றது.

முன்னதாக அவர் நவம்பர் மாத இறுதியில் இந்தியா செல்வதாக இருந்தது. ஆனால், டித்வா சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரிடரால் அவரின் பயணம் பிற்போடப்பட்டது.

இந்தநிலையில் ரில்வின் சில்வா ஜனவரி மாதம் இந்தியா செல்வார் என்று கூறப்படுகின்றது.

இதன்போது, உயர்மட்ட சந்திப்புகளில் பங்கேற்கும் அவர், மாவட்ட சபைகள் முறைமை அல்லது மக்களால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகார ஆளுநர் முறைமை ஊடாக மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்வதற்கான அரசாங்கத்தின் ஆலோசனை குறித்து கலந்துரையாடுவார் என்று கூறப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி






















**கரைதுறைப்பற்று...**

அவர் கடந்த நவம்பர் மாத இறுதிப் பகுதியில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

அதன் அடிப்படையில் புதிய தவிசாளரைத் தேர்தெடுப்பதற்கான கூட்டம் இன்று வடக்கு மாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

தவிசாளர் பதவி போட்டிக்குத் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த இமக்குலேற்றா புஸ்பானந்தன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த தொம்மைப்புள்ளை பபுல்ராஜ், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மிக்கேற்பிள்ளை ஜோன்சன் மோகனராஜா ஆகிய மூவரும் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் இமக்குலேற்றா புஸ்பானந்தன் மற்றும் தொம்மைப்புள்ளை பபுல்ராஜ் இடையில் போட்டி நிலவியது.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் 14 வாக்குகளைப் பெற்று புதிய தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**'தையிட்டி எங்கள்...**

"தையிட்டி எங்கள் சொத்து – எங்கள் காணிகளை அபகரிக்காதே" முதலான கோஷங்களை எழுப்பிய மாணவர்கள், விகாரையை உடனடியாக அகற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் தையிட்டியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட்டமைக்கும், அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யப்பட்டமைக்கும் மாணவர்கள் கடும் கண்டனமும் தெரிவித்தனர்.










**ஜெய்சங்கர் நாளை...**

அமைச்சு இன்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவில் இருந்து மீட்டெழ ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஓப்பரேஷன் சாகர் பந்து" திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதாக இந்தப் பயணம் அமையும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைப் பயணத்தின்போது ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தையிட்டி அராஜகம்

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று புத்தசாசன மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்திருக்கின்றார்.

தையிட்டி விகாரைக்கு எதிரான நேற்றைய போராட்டத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

“தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்குப் பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழே வழங்கப்படுகின்றது. இது பாடசாலை உள்ளிட்ட இடங்களில் வழங்கப்படுவது போன்ற பதவி உயர்வு அல்ல. அத்துடன் தையிட்டி விகாரைப் பிரச்சினையையும் விகாராதிபதிக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டாம். தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து எனது அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவீடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதற்கமைய, விகாரைக்குச் சொந்தமான காணிகளை விகாரைக்கு வழங்கவும் ஏனைய காணிகளை உரிய மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.” - என்றார்.

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும். ஆகவே நீதி வழங்குகிறோம், நீதி வழங்குகின்றோம் என்று இழுத்தடித்து, சட்டவிரோத காணியில் - வல்வந்தமாக ஆக்கிரமிக்கப்பட்ட காணியில் - கட்டப்பட்ட விகாரையை நியாயப்படுத்த - நீதிப்படி நிலைப்படுத்த - எடுக்கப்படும் முயற்சிகள் தீர்வைத் தரப்போவதில்லை.

வெறுமனே உரித்தில்லாத காணியில் கட்டப்பட்ட விகாரை அல்ல இது. இராணுவ நடவடிக்கையின் பேரில் மக்களை அந்தப் பகுதியிலிருந்து துரத்தியடித்து விட்டு, அதன் பெயரில் நிலத்தை ஆக்கிரமித்து, அதில் வல்வந்தமாக இந்த விகாரை கட்டப்பட்டிருக்கின்றது. விகாரை கட்டுவதற்கான அனுமதியை பிரதேச செயலகம் கூட வழங்கவில்லை. ஆக, இந்தக் கட்டுமானம் என்பது அடாவடித்தனத்தின் உச்சம். அத்துமீறலின் உயர்ந்த பட்சம். பேரினவாத அரசின் செல்வாக்கு இருக்கும்போது எதுவும் செய்வோம் என்ற அராஜகத்தின் உயர்ந்த எல்லையில் கட்டப்பட்டதுதான் இந்த விகாரை என்பது தமிழ் மக்களின் கருத்து.

அதற்கு அஹிம்சை வழியில் எதிர்ப்பு தெரிவித்தவர்களை பொலிஸாரின் அத்துமீறல்கள் மூலம் - வன்முறைப் பிரயோகம் மூலம் - கைது செய்ய எடுத்த நடவடிக்கையே அடாவடித்தனத்தின் அடுத்த கட்டம் என்று தமிழர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய கையாளுகைக்கு மத்தியில் இந்தப் பிரச்சினைக்கு சட்டப்படியான தீர்வைத் தவிர, நீதி முறைப்படியான தீர்வைத் தவிர, வேறு எதற்கும் தமிழர்கள் இறங்கி வர மாட்டார்கள். ஏனென்றால் அத்தகைய விதத்தில் தமிழ் மக்களை இந்த விவகாரத்தில் எதேச்சாதிகார பௌத்த - சிங்கள அரசுகள் நடத்தி வருகின்றன.

நிலத்துக்குச் சொந்தக்காரரின் அனுமதி இன்றி கட்டப்பட்ட கட்டடத்தை அகற்ற வேண்டும் என்று சொந்தக்காரர்கள் விடாப்பிடியாக இருப்பதற்குக் காரணம் பௌத்த சின்னங்களைத் தங்களுடைய ஆதிக்க நிலைநாட்டல்களுக்கான குறியீடாக பேரினவாதம் பயன்படுத்தும் சின்னதனம் தமிழர்களுக்கு ஏற்படுத்தியிருக்கும் எரிச்சல்தான்.

தமிழர் தேசமெங்கும் பௌத்த சின்னங்களை ஆக்கிரமிப்பு அடையாளங்களாக நிலை நிறுத்தும் பேரினவாதத் திமிர்த்தன அதிகாரத்தின் மற்றொரு அத்துமீறலே தையிட்டி விகாரையாகும்.

இதை வைத்துக் கொண்டு தென்னிலங்கை ஆட்சி பீடம் தொடர்ந்து மேற்கொண்டு வரும் அடாவடித்தனம், இது விடயத்தில் சட்டம், நீதிக்குப் புறம்பான எந்தத் தீர்வுக்கும் வருவதற்கும் தமிழினத்தை அனுமதிக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.



# காலநிலை மாற்றமும் நுளம்புப் பெருக்கமும்!



க.அரவிந்தன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தற்காலத்தில் யாழ். குடாநாட்டில் நுளம்புகளின் பெருக்கம் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒரு பாரிய அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்பு, காலநிலை மாற்றங்கள் மற்றும் நகரமயமாக்கல் போன்ற பல்வேறு காரணிகள் இதற்கு உந்துசக்தியாக அமைகின்றன. குறிப்பாகக் கடந்த சில ஆண்டுகளில் பெய்து வரும் ஒழுங்கற்ற பருவமழை மற்றும் அதன் விளைவாகத் தாழ்நிலப் பகுதிகளில் தேங்கி நிற்கும் நீர், நுளம்புகள் தங்கு தடையின்றிப் பெருகுவதற்கு ஏதுவான சூழலை உருவாக்கியுள்ளன. இது வெறும் சூழலியல் மாற்றமாக மட்டுமன்றி, டெங்கு, சிக்குன்குனியா போன்ற உயிர்கொல்லி நோய்களின் பரவலுக்குக் காரணமாக அமைந்து பொதுச்சுகாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நுளம்புப் பெருக்கத்துக்கு மிக முக்கியமான காரணம் முறையற்ற கழிவு முகாமைத்துவம் ஆகும். நகர்ப்புறங்களில் வீசப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள், யோகட் கப்புகள், சிரட்டைகள் மற்றும் டயர்கள் போன்றவற்றில் தேங்கும் மழைநீர், 'ஈடிஸ்' (Aedes) வகை நுளம்புகளின் பிரதான உற்பத்தித் தளங்களாக மாறியுள்ளன. அத்துடன், போர்க்கால இடப்பெயர்வுகள் மற்றும் புலம்பெயர்வுகளால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள பராமரிப்பற்ற வெற்றுக்காணிகள் இன்று நுளம்புகளின் பாதுகாப்பானபுகலிடங்களாகத்திகழ்கின்றன. வீதியோரங்களில் உள்ள சீரற்ற வடிகால் அமைப்புகளும், அவற்றில் தேங்கும் கழிவுகளும் நீரோட்டத்தைத் தடுத்து, நுளம்புகள் முட்டையிடுவதற்குச் சாதகமான தேக்க நிலையை உருவாக்குகின்றன.

சுகாதார ரீதியாகப் பார்க்கையில், இந்த நுளம்புப் பெருக்கம் யாழ்ப்பாணத்தின் மருத்துவக் கட்டமைப்புக்கும் பெரும் சுமையைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் டெங்கு காய்ச்சல் மிக வேகமாகப் பரவுவதை அவதானிக்க முடிகிறது. இதனால் பாட-சாலைச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன், மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சமும் நிலவுகிறது. சுகாதாரத் திணைக்களம் மற்றும் மாநகர சபையினரால் புகை விசிறல் (Fogging) மற்றும் நுளம்பு ஒழிப்பு வாரங்கள் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு இன்றி இந்தப் பிரச்சினையை வேரறுப்பது கடினமாக உள்ளது.

இவ்வாறாக, யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது என்பது ஒவ்வொரு பிரஜையினதும் பொறுப்பாகும். தமது வீட்டுச் சூழலைத் தூய்மையாக வைத்திருத்தல், நீர் தேங்கும் பொருள்களை அப்புறப்படுத்துதல் மற்றும் கிணறுகளை முறையாக மூடி வைத்திருத்தல் போன்ற எளிய நடைமுறைகள் மூலம் இப்பாரிய அழிவிலிருந்து சமூகத்தைப் பாதுகாக்க முடியும். அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே யாழ்ப்பாணத்தை நுளம்பற்ற, ஆரோக்கியமான ஒரு பிரதேசமாக மாற்றியமைக்க முடியும்.

# வாசிப்பின் உளவியல் வல்லமை...!!

புத்தகப் பக்கங்கள் மூடிய மன கதவைத் திறக்கும்
அறிவின் ஒளியால் பாதையைப் பிரகாசமாக்கும்
ஒவ்வொரு வரியும் மூளையில் தடம் பதிக்கும்
நரம்பியல் பாலங்கள் வலுவுடன் இணைக்கும்
வாசிப்பு மன அழுத்தத்தை கரைக்கும் மருந்து
உணர்ச்சி சமநிலை தரும் மனநலப் பந்து
சிந்தனையை ஆழப்படுத்தும் அறிவின் விதை
தன்னம்பிக்கையை செழிக்கச் செய்யும் நிலை
சமூகத்தைப் புரிந்துகொள்ளும் பார்வை வளர்க்கும்
மனித நேயம் நிறைந்த நெஞ்சை உருவாக்கும்
நினைவுரூபவ் மொழிரூபவ் சிந்தை
மூன்றையும் வளப்படுத்தும்...
மன அமைதியையும்
புத்திசாலித்தனத்தையும் வளர்க்கும்
வாசிப்பின் உளவியல்
வலிமை அழிக்க முடியாதது!
வாழ்வின் தரத்தை உயர்த்தும் பரிசாகும் அது!
அறிவின் வெளிச்சம் என்றும் தாங்கும் வாள்
வாசிப்பின் உளவியல்
வாழ்வின் வெற்றிக் கால்!



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.



# மத கலவரத்தை தூண்டுகிறாரா அர்ச்சுனா எம்.பி.!

## சர்வதேச இந்துமத பீடம் கண்டனம் தெரிவிப்பு

சமயங்களுக்கு இடையில் கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் அர்ச்சுனா எம்.பி. சமூக ஊடகங்கள் வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இது கண்டிக்கத்தக்க விடயம் என்று சர்வதேச இந்துமத பீடம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அவர்கள் வெளியிட்டுள்ள கண்டனச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சமூக ஊடகங்கள் ஊடக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஒரு வீடியோ பதிவு மூலம் கண்டிக்கத்தக்க செய்தியைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக நல்லூர் ஆலயம் முன்னர் ஒரு காலத்தில் அந்த முத்திரைச் சந்தியல் அமைந்துள்ள கிறிஸ்தவ ஆலயம் இருக்கும் இடத்தில்தான் இருந்தது. எனவே அதனை உடைப்பார்களா என்ற தொனியில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கருத்து இந்து மதத்தவர்களுக்கும் கிறிஸ்தவ மத்ததவர்களுக்கும் இடையே மதக் கலவரத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளதா என்ற கேள்வி எழுப்பும் வகையில் அவரது உள்ளது.

அங்கிருந்த நல்லூர் ஆலயம் இடிக்கப்பட்டு கோட்டை கட்டப்பட்டது. ஆகவே கோட்டையை இடிப்பர்களா என்ற வினாவும் தொடுத்துள்ளார்.

இந்த நிலைமை இருக்கும்போது, தையிட்டி விகரையை உடைக்க சொல்வது சரிதானா என்ற பாணியில் கருத்துத் தெரிவித்துள்ளார் .

இவரது கருத்து மூலம் இவரது உள் நோக்கம் தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு தெரிவிப்பது அனாவசியம் என்பதையே காட்டுகிறது.

இதனால் தையிட்டி விகாரை அமைவிடத்துக்கு மறைமுகமாக ஆதரவையும் அர்ச்சுனா தெரிவிக்கிறார் என்பதை தமிழ் மக்கள் உணராமல் இல்லை.

எனவே மத கலவரத்தை தூண்டும் வண்ணம் இந்த காணொளி அமைந்திருக்கின்ற நிலையில் சர்வதேச இந்துமத பீடம் பெரும் கவலை கொண்டுள்ளது. அவரது கருத்துக்குக் கண்டனம் தெரிவித்துக் கொள்கின்றோம்.– என்றுள்ளது.





# விவசாயிகளுக்கு நஷ்டஈடு பெற்றுத் தரப்படும்!

## உறுதியளித்தார் ஆதம்பாவா எம்.பி.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து, அங்குள்ள நிலமைகளைப் பார்வையிட்ட ஆதம்பாவா எம்.பி. அரசிடமிருந்து நஷ்டஈடு பெற்றுத் தருவார் என்று உறுதியளித்தார்.

இறக்காமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆஸ்பத்திரிசேனை அண்டிய பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்குக் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அவர்களுடைய நிலங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அழிவுகள் பற்றி ஆராய்ந்த அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்தி குழுத் தலைவரும், இலங்கை அரசமைப்புப் பேரவை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா விவசாயிகளின் அழைப்பின் பேரில் நேரில் சென்று பார்வையிட்டு, மேற்படி விவசாயிகளுடன் கலந்துரையாடிய வேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, நீர்ப்பாசன திணைக்கள தலைமை பொறியியலாளர்கள், திணைக்கள உயரதிகாரிகள், பிரஜா சக்தி தவிசாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா சமாதான பேரவையால் சாமிமலை நகரில் விழிப்புணர்வு!








**(செ.தி.பெருமாள், மஸ்கெலிய நிருபர்)**

நுவரெலியா மாவட்ட சமாதான பேரவை மற்றும் மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் அலுவலகம் இணைந்து சாமிமலை நகரில் விழிப்புணர்வு செயலமர்வை நடத்தியுள்ளன.

இந்த நிகழ்வு இன்று சாமிமலை நகரில் உள்ள ஆலய மண்டபத்தில் நுவரெலியா மாவட்ட சமாதான பேரவையின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் திருமதி இரேஷா உதேனி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மஸ்கெலியா சுகாதார அதிகாரி பிரிவில் உள்ள சாமிமலை பகுதியில் உள்ள பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள பொது சுகாதார மருத்துவ தாதியர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் 200 இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் இதில் கலந்து கொண்டனர்.

பள்ளி பருவத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள், பிள்ளைகளுக்கு மிகவும் அவதானமாக எளிதாக விளங்க கூடிய வகையில் வளவாளர்களாக கலந்து கொண்ட சாமிமலை பகுதியில் உள்ள பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் பொது சுகாதார மருத்துவ தாதியர்கள் எடுத்துக் கூறினர்.

# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்!





**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

உரிமை மீட்போம் தலைமுறை காப்போம் அமைப்பின் ஊடாக இன்று ஹட்டன் செனன் 50 ஏக்கர் தோட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்க வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கழக தலைவர் பா.சிவநேசன் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.





# சந்திவெளி பாலையடித்தோணா கிராம மக்களுக்கான நிவாரணங்கள் வழங்கல்

(பழுவூரான்)

மட்டக்களப்பு சந்திவெளி பாலையடித்தோணா கிராமத்தில் உள்ள 110 குடும்பங்களுக்கான நிவாரணப் பொதிகள் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தனால் வழங்கி வைக்கப்பட்டது.

சிரேஸ்ட ஊடகவியலாளரும் ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினருமான செ.நிலாந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க சேவகம் நிறுவனத்தின் ஊடாக வெள்ளிக்கிழமை பிரான்ஸ் புலம்பெயர் தமிழர் அமைப்பின் நிதி உதவியில் மட்டக்களப்பு சந்திவெளி பாலையடித்தோணாவில் உள்ள 110 குடும்பங்களுக்கான நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாழைச்சேனை பிரதேச சபை தவிசாளர் சுதாகரன், உப தவிசாளர் நவநீதன், இணைப்பாளர் வினோ உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிவாரணப் பொருள்களை வழங்கி வைத்தனர்.





# பதுளையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள்!

(நூருல் ஹுதா உமர்)

மஹியங்கனை, பங்கரகம்மன கிராமத்தில் அமைந்துள்ள மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவின் ரோஹண, தம்பகொல்ல மற்றும் உடவெல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் றிஷாத் பதியுதீனின் வழிகாட்டலிலும், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரின் ஏற்பாட்டிலும், நிந்தவூர் மாஸ் பௌண்டேஷன் அமைப்பின் அனுசரணையுடன் குறித்த பிரதேசங்களுக்கு நேரடியாக சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவின் வேண்டுகோளின் பேரில், பங்கரகம்மன மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினர் முஹம்மட் றிஸ்வான் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியோக செயலாளர் எஸ். முஹம்மட் அலி ஜின்னா, நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்களான ஐ.எல்.எம். ஜாபிர், கே.எம். ஜலீல், எச். அம்ஜத் அலி, எம்.ஜே.எம். ஜுசைல் உள்ளிட்ட நிந்தவூர் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் இந்தப் பணியில் இணைந்து கொண்டிருந்தனர்.

### ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறி

# ஆட்சிக்கு வந்துள்ள அநுர அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்கிறது

### இம்ரான் எம். பி. தெரிவிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஜனநாயகத்தை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வது ஆபத்தானது என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

திருகோணமலை மாவட்ட கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான உப குழு கூட்டம் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் ஆளுங்கட்சியின் ரொஷான் அக்மீமன எம்.பியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கோ குகதாசன் எம்.பிக்கோ இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு இல்லை.

மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்க்கட்சியின் வசம் இருப்பதால் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களுக்கும் அழைப்பு இல்லை.



தனியொரு எம். பியால் அதிகாரிகளை வைத்து இந்த கூட்டம் நடைபெறுகின்றது. இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து சொல்வதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் முடக்கியுள்ளது.

இதன்மூலம் இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கிச் செல்வது தெளிவாகின்றது. இது ஆபத்தான விடயமாகும்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது குறித்து பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும்.– என்றார்.

### கல்முனை மாநகர சபையின்

# திண்ம கழிவகற்றவுக்கு முதற்கட்டமாகத் தீர்வு!

### மாநகர ஆணையாளர் றாபி தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் சேவையில் நிலவி வந்த சிக்கல்களுக்கு முதற்கட்ட தீர்வு தற்போது கிடைத்துள்ளது என்று கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.டி.எம்.றாபி தெரிவித்தார்.

கல்முனை மாநகர ஆணையாளருக்கும் சிலோன் மீடியா போரம் ஊடகவியலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சினேகபூர்வ சந்திப்பின் போது கல்முனை மாநகர திண்மக்கழிவகற்றல் பிரச்சினைகள், சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன் போதே அவர் இதனை தெரிவித்தார்.

திண்மகழிவகற்றல்தொடர்பில்மாநகர சபை எதிர்கொண்ட சவால்களை கடக்க ஆரம்ப நிலை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அதன் மூலம் சேவை ஒரு அளவு சீராகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்காலத்தில் கல்முனை மாநகரில் திண்ம கழிவகற்றல் பிரச்சினைக்கு சகல தரப்பினரின் ஒத்துழைப்புடன் நிரந்தரமான தீர்வு ஒன்றை அமுல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் மாநகர ஆணையாளர் இதன்போது தெரிவித்தார்.



இதற்காக அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிர்வாகம், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் அனைவரின் பங்களிப்பும் அவசியம் எனவும் அவர் வலியுறுத்தினார்.

கல்முனை மாநகரை சுத்தமானதும் சுகாதாரமானதுமான நகரமாக மாற்றும் நோக்கில் தொடர்ச்சியான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும், ஊடகங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இந்த நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கல்முனை பிரதேசத்துக்குட்பட்ட

# மருதமுனை ஜாயா வீதியை அபிவிருத்தி செய்யக் கோரல்!





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபை மற்றும் கல்முனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மருதமுனையின் உள்ளக பிரதான வீதிகளில் ஒன்றான மருத முனை ஜாயா வீதியானது மிக நீண்ட காலமாக எதுவித அபிவிருத்தியும் இன்றி காணப்படுவதானது இப்பிரதேச மக்களுக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது என்று கல்வி மற்றும் சமூக வலுவூட்டலுக்கான ஒத்துழைப்பு அமையத்தின் செயற்பாட்டு பணிப்பாளர் எம்.ஐ.எம். வலீத் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

சாதாரண மழை பெய்தால் கூட பெரு வெள்ளமும்,சேறும் சகதியுமாக காணப் படும் மேற்படி வீதியானது மழை காலங்களில் பாடசாலை மாணவர்கள் கூட போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு மாறிவிடுகின்ற அதே வேளை, இவ்வீதி பல்வேறு வகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக வும் காணப்படுகின்றது.

இந்த வீதியானது குறிப்பாக மருத முனையின் பெரிய பள்ளிவாச லான மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆப் பள்ளி வாசல், மருதமுனையின் பிரதான சந்தை, முன்னணிப் பாடசாலையான அல்-ஹம்றா வித்தியாலயம், ஸைனப் முஸ்லிம் மகளிர் அரபிக் கல்லூரி, ஹம்றா பாலர் பாடசாலை உள்ளிட்ட பல அரச, தனியார் நிறுவனங்களுக்கான பிரதான போக்குவரத்து பாதைகளில் ஒன்றாகக் காணப்படுவதுடன், மருத முனை மக்களின் அதிக பாவனைக் குரியதாகவும் இவ்வீதியே காணப்படு கின்றது.

நீண்டகாலமாக கல்முனை மாநகர சபையினதோ அல்லது கல்முனை பிர தேச செயலகத்தினதோ எதுவித செயற் றிட்டங்களுக்குள்ளும் உள்வாங்கப் படாது தொடர்ந்தும் திட்டமிட்டு புறக்கணிக் கப்பட்டு வருவது குறித்து இந்தப் பிர தேச மக்கள் விசனம் தெரிவிக்கின்ற னர்.

எனவே சம்பந்தப்பட்ட உயர் அதி காரிகள் மற்றும் அரசியல்வாதிகள் இதில் தலையிட்டு விரைவான தீர்வைப் பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர் என்று தெரிவித்துள் ளார்.






# பதுளை கைலகொட மக்களுக்கு இணைந்த கரங்கள் பேருதவி!

( வி.ரி.சகாதேவராஜா)

இணைந்த கரங்கள் அமைப்பு பதுளை 78 ஜி கைலகொட கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் 18 குடும்பங் களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை நேற்று முன்தினம் வழங்கி வைத்தன.

இரண்டு பெரிய அங்கர் பக்கட்டுகள் அடங்கலாக தலா 10 ஆயிரம் ரூபா மதிப்பிலான பொதிகள் வழங்கி வைக் கப்பட்டன.

இந்தப் பகுதி பதுளை ஓயாவுக்கு மிக அருகில் ஏறத்தாழ 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள பிரதேச மாகும்.

இந்த வீடுகளில் வசிக்கும் முதி யோர்கள் தங்கள் வயதுக்கு இப்படி ஒரு வெள்ளம் தங்கள் வீடுகளுக்கு வரவில்லை என்றே கூறுகிறார்கள்.

கிட்டத்தட்ட எல்லாமே நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ள அவலம்.

சில முதியோர்களை வலுக்கட்டாய மாக அழைத்துச் சென்று விகாரை யில் தங்க வைக்க வேண்டியேற்பட்டது. பின்பு தேவாலயத்தில் மாற்றப்பட்டு அங்கு அந்தக் குடும்பங்கள் இருக் கின்றனர்.

கண்மூடித் திறப்பதற்குள் தங்கள் வாழ்நாளில் உழைத்த அனைத்தும் தண்ணீரோடு போய்விட்ட நிலை.

இந்த நிர்க்கதியான நேரத்தில் எமது கோரிக்கையை தம் சிரமேற்கொண்டு நிதியுதவி அளித்த ஆஸ்திரேலியா இணைந்த கரங்கள் அமைப்புக்கு நன்றியுடன் நினைவு கூர்வதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.



# வட்டுக்கோட்டையின் காற்றில் ஓடும் சக்கரம்

## (ஒரு வெளி மாவட்ட பார்வையாளியாகிய என் கண்களில் மாட்டு வண்டிப் பந்தயத்தின் உயிர்த்துடிப்பு)

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

தெரிந்திராத ஒரு விடயத்தை அதுவும் நம் ஊரில் எங்குமே கண்டிராத ஒரு விடயத்தை அதுவே ஒரு நமக்குத் தெரிந்திடாத பாரம்பரியமாக இருந்தால் அப்படி ஒரு வீரத்தைக் காட்டும் பாரம்பரியம் தான் இது.

திருகோணமலையில் பிறந்து வளர்ந்த நான், ஊரின் மண்வாசனை, கடற்கரையின் அலை சத்தம், உப்பளங்களின் சூரிய வெப்பம் ஆகியவற்றோடு பழகியவள். ஆனால், நான் இவ்வளவு நாள்களாக வாழ்ந்து கொண்டிருந்த இந்தத் தீவைப் பற்றிய என் புரிதலில் இன்னும் காணாத ஒரு உலகம் இருப்பதை, யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டை என்னும் சிறிய கிராமம் எனக்கு உணர்த்தியது. அங்கே நான் முதன்முதலில் பார்த்த மாட்டு வண்டி பந்தயம், எனது மனசாட்சியில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியது. இது வெறும் விளையாட்டோ அல்லது கிராமிய பொழுதுபோக்கோ அல்ல. மாறாக ஒரு சமூகத்தின் உயிரோட்டத்தை, அதன் பாரம்பரிய துடிப்பை, மண் கலாச்சாரத்தின் தனித்தன்மையைக் காத்து நிற்கும் விடாமுயற்சியை உணர்த்தும் ஒரு நிகழ்வு.

அந்த நாளில், மண் சூழ்ந்த குறுகிய பாதையை நம்பிக்கையோடு நோக்கி நிற்கும் மக்கள் கூட்டத்துடன் நானும் கலந்து நின்று கொண்டிருந்தேன். தூரத்தில் இருந்து வரும் மாடுகளின் கால் ஒலியும், வழக்கமான பண்ணை வாசனையும் சேர்ந்து, அந்த கிராமத்தின் வாழ்க்கைத் துடிப்பை முழுமையாக வெளிப்படுத்தியது.

ஒவ்வொருவரும் எதிர்பார்ப்பின் நடுக்கத்தில் கண்களைச் சுருக்கி தொலைவில் பார்க்க, நான் பார்க்கும் காட்சியோ முற்றிலும் புதிது. என் நினைவுகளில் இதற்கு ஒப்பான எதுவும் இல்லை. இதுதான் நான் அபூர்வமாக அனுபவிக்க வந்த இடம் வட்டுக்கோட்டை மாட்டு வண்டி பந்தயம்.

அந்தச் சூழலை நான் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, உள்ளூர் மக்கள் பரிந்துரைத்தபடி, பல ஆண்டுகளாக இந்த மாட்டு வண்டி பந்தயத்தில் ஈடுபட்டு வரும் பவித்திரன் என்பவரை நாடினேன். அவர் என்னைக் கண்ட போது, என் முகத்தில் தெரிந்த ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் பார்த்து, ஒரு சிரிப்புடன் "நீங்கள் இது முதல் முறை பார்க்க வந்த நீங்களா?" என்று கேட்டார். நான் தலை அசைத்தபோது, அவர் தனது கண்களில் ஒரு பெருமையையும், சற்றே தெரியாத விதமான மென்மையையும் கொண்டார். "அப்போ உங்களுக்காக முழுதையும் சொல்றேன். மாட்டு வண்டி பந்தயம் அப்படி சும்மா ஓட்டுறது இல்ல. நம்ம வாழ்க்கையின் ஒரு பகுதி இது," என்றார்.

அவருடன் நான் நிழல் பரவிய மரத்தடியில் அமர்ந்த போது, அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு காற்றும், மண்ணின் அமைதியும், மாடுகளின் மெலிந்த மூச்சுத்திறனும் என்னை சுற்றிக் கொண்டன. பவித்திரன் தனது கதையை தொடங்கியதுமே, நான் ஒரு கட்டுரையை எழுத வந்த செய்தியாளனல்ல. மாறாக அந்தக் கலாசாரத்தில் நுழைந்து அதன் துடிப்பை உணரும் ஒரு பயணியாக மாறினேன். அத்தோடு மாட்டு வண்டி சவாரி பந்தயத்துக்கு மாடுகளை ஆயத்தப்படுத்தும் முறை பற்றியும் அவர் கூறியிருந்தார்.

அதாவது மாடுகளை பந்தயத்துக்கு அனுப்பும் நாளுக்கு முன்னைய நாள் மாடுகளை எவ்வித வேலைகளிலும் ஈடுபடுத்தாமல் வெயிலில் அதன் செயற்பாட்டின்பால் விடுவதாகவும் மாடுகளை பந்தயத்துக்கு விட வேண்டும் என்றால் அதற்கு சில நாள்களுக்கு முன்பு மாடுகளே வயல்களில் உழவுக்கு விடுவதாகவும் கூறியிருந்தார். ஏன் என வினவியோ போது அப்போதுதான் மாட்டின் கீழ் பாதம் பெரிதாக வலுவாக காணப்படும் என்பதற்காகவும் நரம்பைச் சீர்படுத்துவதற்காகவும் மற்றும் களைப்பை இல்லாது செய்வதற்காகவும் இந்த முறையை மாடுகளைப் பந்தயத்துக்கு விட முன் செய்வோம் என கூறியிருந்தார்.

அது மாத்திரமன்றி மாடுகளை பந்தயத்துக்கு விட முன் அந்த மாடுகளுக்கு சாராயம் தேங்காய்

தொடர்ச்சி ▼

# வட்டுக்கோட்டையின் காற்றில் ஓடும் சக்கரம்

தொடர்ச்சி ▲

அல்லது ஸ்பிரைட் சோடாவுடன் பெனடால் வழங்குவதாகவும் அவர் கூறியது என்னை வியப்படையை செய்தது. மேலும் ஆரம்ப காலத்தில் தங்கள் வீரத்தையும் பாரம்பரியத்தையும் காட்டுவதற்காகவே இந்த பந்தயம் காணப்பட்டதாகவும் தற்போது இந்த பந்தயம் ஒரு வணிக உத்தியாக செல்வம் படித்தவர்கள் பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் கூறி இருந்தார்.

அது எவ்வாறு என நான் வினவியோ போது நடக்கும் பந்தயத்தில் தொடர்ச்சியாக வெற்றி பெறும் மாடுகளை இனம் கண்டு அந்த மாடுகளை 4 லட்சம் அல்லது 6 லட்சம் கொடுத்து வாங்கி அதனை அவர்களின் பேருக்காக பந்தயத்தில் விட்டு முதல் பரிசைப் பெறும் ஒரு நுட்ப முறையைத் தற்காலத்தில் செல்வம் படைத்தவர்கள் பயன்படுத்துவதாகவும் கூறியிருந்தார்.

இவ்வாறு பேசிக் கொண்டிருந்தவர் திடீரென “மாட்டு வண்டி பந்தயத்தை எதுக்கு நிறுத்தணும்?” என்று அவர் கேட்டார். அந்தக் கேள்வி ஒரு பதில் இல்லாத வினாக்கள் ஆயிரம் கிளப்பின. அடுத்த நொடி அவர் தனது விளக்கத்தைத் தொடங்கினார்.

“நாம் வட்டுக்கோட்டை என்று சொன்னதும், மக்கள் முதல்ல சொல்வது மாடு, வண்டி, வயல். இந்த மூன்றும் தான். இவை இல்லால் நம்ம ஊரின் வரலாறு எழுத முடியாது. முன்னர் போக்குவரத்துக்கு, பொருள்களை எடுத்துச்செல்ல, ஏர் உழ எல்லாத்துக்கும் மாட்டு வண்டிதான் இருந்தது. மாடுகளுடன் மனிதனுக்கு ஒரு உறவு இருந்தது. அப்படித்தான் அன்பில் இருந்து விளையாட்டு வந்தது. அதுதான் இப்ப நாம் பார்க்கும் மாட்டு வண்டி பந்தயம். என்றார்.

பவித்திரனின் குரல் ஒவ்வொரு சொற்களிலும் உண்மையை மீட்டெடுக்கும் ஒரு சக்தி கொண்டது. அவர் தன் கையை நீட்டி அருகில் கட்டப்பட்டிருந்த தன் மாடுகளைப் பார்த்தார். “இதுகள் சும்மா மாடுகள் இல்ல. நமது குடும்பம் போல. தினமும் காலை எழுந்ததும் நான் முதல்ல பார்க்கறது இவங்களைத் தான்.” என்றபடி, அவர் தன் மாடுகளின் நெற்றி மீது சொருகும் விரலை பார்த்தபோது, ஒரு மனிதனுக்கும் ஒரு மிருகத்துக்கும் இடையே இருக்கக் கூடிய நெகிழ்ச்சியான பிணைப்பை உணர்ந்தேன்.

அந்த மாடுகள் பந்தயத்துக்காக பயிற்சி பெறும் விதம் ஒரு தனி கலை. பவித்திரன் அதை மிகுந்த ஆர்வத்துடன் விளக்கினார். “நெல்லும் சோறும் சாப்பிடுறவங்க தான் வலிமையா இருக்க முடியாது. அதே மாதிரி மாடுகளுக்கும் உணவு பக்கமும், ஓட்டத்துக்கு ஒத்த உத்தியும் ரொம்ப முக்கியம். மாலை நேரத்துல ஒரு சிறிய ஓட்டம், காலை நேரத்துல ஒரு நீள ஓட்டம், நடுவில் ஓய்வு. இப்படி நம்ம ஊர்ல மாடுகளை பயிற்சி செய்றது ஒரு வழக்கம்.”

அவரது குரலில் கடினத்தின் பெருமையும், அன்பின் மெலிவும் கலந்திருந்தது. பவித்திரன் தொடர்ந்து, இன்று மாட்டு வண்டி பந்தயம் கிராமத்தின் அடையாளமாக இருப்பதையும், இது எப்படி ஒரு சமூகத்தை ஒன்று சேர்க்கும் பண்டிகை மாதிரியான நிகழ்வு என்பதையும் பற்றிக் கூறினார். “எப்ப பந்தயம் நடக்குதோ, அந்த நாள்ல ஊர்ல யாரும் இல்லாம போக மாட்டாங்க. பெரியவர்களும், குழந்தைகளும், பெண்களும் கூட வருவாங்க. இது ஒரு விளையாட்டு மட்டும் இல்ல. நம்ம பாசத்தையும், நம் மண்ணையும் காக்கிற ஒரு நினைவுப் பயணம்.”

ஆனால் பவித்திரனின் முகத்தில் ஒரு சோக நிழல் திடீரென தோன்றியது. “இப்போ இந்த கலாச்சாரம் தடுமாறுதே. சாலை வந்தது, வண்டிகள் வந்தன, வேலையெல்லாம் மாறிக்கொண்டு போகுது. புதிய தலைமுறைக்கு இந்தப் பந்தயம் பற்றித் தெரியாது. இன்னும் கொஞ்சக் காலத்தில் மாட்டுப் பந்தயம் அருங்காட்சியகத்துல மட்டும் தான் இருக்கும்.” என்றார்.

அந்த வரிகளை கேட்டபோது எனக்குள் ஒரு அதிர்ச்சி. ஒரு கலாசாரம் இவ்வளவு அழகாக இருந்தும், அது மெல்ல அழிந்து கொண்டிருக்கிறது என்ற உணர்வு எனக்கு துயரத்தை அளித்தது. திருகோணமலையிலிருக்கும் எனக்கு இந்தப் பந்தயம் பற்றி என் முன் விழுந்தது ஒரு சமூகத்தின் போராட்டம். அதன் பாரம்பரியத்தை காப்பாற்றும் அமைதியான சண்டை.

இந்நேரத்தில் தூரத்தில் இருந்து வண்டிகளின் சத்தம் உயரும் போது, பவித்திரன் எழுந்து “வாங்கோ பந்தயம் தொடங்கப் போகுது” என்று கூறினார். நான் மக்களுடன் சேர்ந்து நின்றேன். மாடுகளின் கால் சத்தம் திடீரென புன்னகையையும் பயத்தையும் சேர்த்த கலவையை மக்களிடம் உண்டாக்கியது. இரண்டு மாடுகள் வண்டியை இழுத்து மின்னல் வேகத்தில் நிலத்தைத் தாண்டி ஓடும் அந்தக் காட்சி, நான் வாழ்நாளில் மறக்க முடியாது.

அந்த கணங்களில் மண் பறக்க, மக்கள் ஆர்ப்பரித்தனர். ஓர் கிராமத்தின் இதயம் அங்கே துடித்தது. மனிதன், மாடு, மண் மூன்றும் ஒரே நேரத்தில் ஒன்றாக ஓடியது போல் தோன்றியது.

பந்தயம் முடிந்தபோது, மக்கள் சிரிப்புடன் கலைந்தார்கள். ஆனால் அந்த சிரிப்பில் ஒரு நிம்மதியும், ஒரு துக்கமும் கலந்து இருந்தது. பவித்திரன் என்னை நோக்கி, “இதைத்தான் நாங்க காப்பாத்தி வைக்கணும். தலைமுறைக்கு தலைமுறைக்கு என்று நீங்க கண்டு எழுதுறீங்க எண்டால் அதுவும் ஒரு பாதுகாப்புதான்,” என்றார்.

அந்தச் சொற்கள் என்னை நெஞ்சில் ஆழமாகப் பதிந்தன. திருகோணமலையிலிருந்து யாழ் பல்கலைக்கழகம் வந்த நான், யாழ்ப்பாணத்தின் மாட்டு வண்டி பந்தயத்தை பார்த்து திரும்பும் போது என் உள்ளத்தில் எடுத்துச் சென்றது ஒரு கிராமத்தின் வரலாறும், ஒரு சமூகத்தின் பெருமையும், விரைந்து ஓடும் நவீன உலகத்தில் மெல்ல மறைந்து செல்லும் ஒரு கலாசாரம் பற்றிய கவலையும்.

நான் என் நடைமுறைக்கு திரும்பும் போதும், வட்டுக்கோட்டையின் மண் வாசனையும், மாடுகளின் கால் ஒலியும், பந்தயத்தின் உந்துதலும் என் உள்ளத்தில் நீண்டகாலம் ஒலித்துக் கொண்டிருந்தன.

இது நான் பார்த்த ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல. இது நான் சாட்சியமான ஒரு காலப் பயணம். ஒரு காலம், அதுவே தன்னை மறக்காமல் மனிதர்களிடம் தன்னை நினைவூட்டிக்கொள்ள ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பந்தயச் சவாரி வன்னி, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாண மாவட்டம் என பிரிவுகளாக நடக்கின்றது. அதனையும் காண வேண்டும் என்ற ஒரு அவா என்னுள் இருக்கிறது. ■

# தி.மு.கவை அகற்றும் ஒருமித்த கருத்துடைய கட்சிகள் எங்கள் கூட்டணியில் இணையலாம்

## அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவிப்பு

"தி.மு.க. மக்கள் விரோத அரசாங்கம். தி.மு.க. ஆட்சியை அகற்ற ஒருமித்த கருத்துடைய கட்சிகள் எங்களுடன் கூட்டணியில் இணையலாம்."

-இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது,

"ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்போடு 5000 ரூபாயை தமிழக அரசு வழங்க வேண்டும். கடந்த 10 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்தோம். எந்த ஆட்சிக்கும் ஏற்படாத பிரச்சினைகளை சந்தித்தோம். வறட்சி, பல புயல்கள் மற்றும் கொரோனாவை சந்தித்துள்ளோம். கொரோனாவுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாயை செலவு செய்துள்ளோம்.

தி.மு.க. ஆட்சியில் கடன் மட்டும் தான் வாங்கி கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சி நிறைவு செய்யும்போது சுமார் 5 லட்சம் கோடி இந்திய ரூபா கடன் உள்ள மாநிலமாக தமிழகம் இருக்கும். இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் முதல் மாநிலமாக தமிழகம் தான் இருக்கும். இதுதான்



ஸ்டாலின் ஆட்சியின் சாதனை. ரயில் கட்டண உயர்வு குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்பட்ட எத்தனை வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன?. தி.மு.கவின் தேர்தல் அறிக்கை, நூறு நாள் வேலைத் திட்டம் 150 நாள்களாக உயர்த்தப்படும் என தெரிவித்தது. ஆனால் செய்தார்களா? இன்று மத்திய அரசு 100 நாள் வேலைத் திட்டத்தை 125 நாள்களாக உயர்த்தியிருக்கிறது. அதனை பாராட்ட தி.மு.க. அரசுக்கு மனமில்லை.

100 வேலை திட்டத்தை 150 நாள்களாக உயர்த்துவோம் என கூறினார்கள் செய்தார்களா, டீசல், பெட்ரோல் விலை குறைப்போம் என சொன்னார்கள். இது போல பல கவர்ச்சிகரமான திட்டங்களை சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் அ.தி.மு.க. கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம். விரைவில் அ.தி.மு.க. தலைமையிலான ஆட்சி அமையும்.

ஒரு கோடி வாக்காளர்கள் நீக்கப்படவில்லை. போலியான வாக்காளர்கள்தான் நீக்கப்பட்டுள்ளனர். எஸ்.ஐ.ஆர். பணிகள் என்பது அனைத்து கட்சிகளுக்கும் பொதுவானது. இதில் என்ன குறைபாடு உள்ளது? போலி வாக்காளர்கள் நீக்கப்பட வேண்டும் என்பதால் மட்டுமே எஸ்.ஐ.ஆருக்கு அ.தி.மு.க. ஆதரவு தருகிறது.

21 ஆண்டு காலமாக எஸ்.ஐ.ஆர். பணி நடக்கவில்லை. இதனால் இறந்தவர்கள் அனைவரும் திமுக காரர்களால் எழுந்து வந்து ஓட்டு போட ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் தற்போது எஸ்ஐஆர் பணி முழுமையாக முடிவடைந்து விட்டால் போலி வாக்காளர்கள் நீக்கப்பட்டுவிடுவார்கள். அதனால் தான் ஸ்டாலின் கதறுகிறார், பதறுகிறார்.

தி.மு.க. மக்கள் விரோத அரசாங்கம். தி.மு.க. ஆட்சியை அகற்ற ஒற்றை கருத்துடைய கட்சிகள் எங்களுடன் கூட்டணியில் இணையலாம்."

என்று அவர் தெரிவித்துள்ளார்.






# சமய, நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் த.வெ.க. 100 வீதம் உறுதியாக இருக்கும்

## நத்தார் விழாவில் விஜய் உரை

"சமூக, சமய, நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் த.வெ.க. 100 வீதம் உறுதியாக இருக்கும். அதில் எந்தவிதமான சமரசமும் கிடையாது. நமது கொள்கைகளுக்கு மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கைகள் எனப் பெயர் வைத்ததே இந்த உறுதியினால் தான். கண்டிப்பாக ஒரு ஒளி பிறக்கும். அந்த ஒளி நம்மை வழிநடத்தும்."

- இவ்வாறு சமத்துவ நத்தார் விழாவில் த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் உள்ள விடுதியில் இன்று காலை சமத்துவ நத்தார் விழா நடைபெற்றது. அந் நிகழ்வில் விஜய் பேசும்போது,

"அன்பும், கருணையும் தானே எல்லாம். தமிழ்நாட்டு மண், தாயன்பு கொண்ட மண். ஒரு தாய்க்கு எல்லா பிள்ளைகளும் ஒன்றுதானே. அது போல பொங்கல், ரம்ஜான், நத்தார் என எல்லா பண்டிகைகளையும் பகிர்ந்துகொள்ளக் கூடிய ஊர்தான் நமது ஊர்.

இங்கு வாழ்க்கை முறையும், வழிபாட்டு முறையும் வேறு வேறு என்றாலும் நாம் அனைவரும் சகோதரர்கள் தான். அதனால் தான் அரசியலுக்கு வந்ததற்கு பிறகு கடவுள் நம்பிக்கை உண்டு என்று அறிவித்தோம். உண்மையான நம்பிக்கைதான் நல்லிணக்கத்தை விதைக்கும், மற்றவர்களின் நம்பிக்கையை மதிக்கச் சொல்லித் தரும். அப்படிப்பட்ட நம்பிக்கை இருந்தாலே போதும், எப்படிப்பட்ட பிரச்சனைகளையும் ஜெயிக்க முடியும்.

சமூக, சமய, நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் த.வெ.க. 100 வீதம் உறுதியாக இருக்கும். அதில் எந்த விதமான சமரசமும் கிடையாது. நமது கொள்கைகளுக்கு மதச்சார்பற்ற சமூக நீதிக் கொள்கைகள் எனப் பெயர் வைத்ததே இந்த உறுதியினால் தான். கண்டிப்பாக ஒரு ஒளி பிறக்கும். அந்த ஒளி நம்மை வழிநடத்தும். அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துகள். அனைத்துப் புகழும் எல்லாம் வல்ல இறைவனுக்கே.. Praise the Lord. நம்பிக்கையுடன் இருங்கள். நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்." என்று தெரிவித்தார்.

# தொடரும் வன்முறை சம்பவங்களின் எதிரொலி: பங்களாதேஷில் இந்திய விசா மையம் மூடல்

பங்களாதேஷின் சிட்டகாங் நகரில் உள்ள இந்திய விசா விண்ணப்ப மையத்தை மத்திய அரசு மூடியுள்ளது.

பங்களாதேஷில் கடந்த ஆண்டு மாணவர்கள் நடத்திய போராட்டத்தை தொடர்ந்து, பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். அதன் பிறகு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. மாணவர் போராட்டத்துக்கு தலைமையேற்று நடத்திய ஷெரீப் உஸ்மான் ஹாடி கடந்த 12 ஆம் திகதி டாக்காவில் சுடப்பட்டு உயிரிழந்தார்.

இதையடுத்து, டாக்காவில் ஹாடியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இதற்கிடையில், பங்களாதேஷின் பல பகுதிகளில் வன்முறை ஏற்பட்டது. இந்து இளைஞர் ஒருவரை கொடூரமாக தாக்கி, மரத்தில் கட்டி வைத்து எரித்தனர். இதனால் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

மேலும், இந்திய துணைத் தூதர் இல்லம், அலுவலகத்தின் மீது கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து டாக்காவில் உள்ள இந்திய விசா விண்ணப்ப மையம் மூடப்பட்டது. தற்போது பங்களாதேஷின் 2 ஆவது பெரிய நகரமான சிட்டகாங்கிலும், இந்திய விசா விண்ணப்ப மையம் நேற்று மூடப்பட்டது.




பங்களாதேஷில் உள்ளவர்கள் இந்தியாவுக்கு வர இந்திய விசா பெற வேண்டும். அதற்கென அமைக்கப்பட்டுள்ள இந்திய மையங்களில் விசா விண்ணப்பங்கள் அளிக்க வேண்டும். அதைப் பரிசீலித்து இந்திய தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். அதன்பிறகு தகுதி உள்ளவர்களுக்கு குறிப்பிட்ட காலத்துக்கு இந்திய விசா வழங்கப்படும்.

பெரும்பாலும் மருத்துவ சிகிச்சை, வர்த்தகம் போன்ற வற்றுக்காக வங்கதேசத்தினர் இந்தியா வருகின்றனர். இந்திய விசா மையங்கள் மூடப்பட்டுள்ளதால், அவர்களுக்கு விசா கிடைப்பது சிக்கலாகி உள்ளது. அடுத்த உத்தரவு வரும் வரையில் சிட்டகாங் இந்திய விசா விண்ணப்ப மையம் மூடப்பட்டிருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிராக தவறான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாக மத்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில்.

"திபு சந்திர தாஸ் என்ற இந்து இளைஞர் படுகொலையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது பங்களாதேஷ் இடைக்கால அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தாஸ் கொலையை கண்டித்து இந்தியாவில் உள்ள வங்கதேச தூதரகத்தின் முன் 25 இளைஞர்கள் கோஷமிட்டனர்.

ஆனால், பங்களாதேஷ் தூதரகத்துக்கு, உள்ளே நுழைந்து பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்த முயன்றதாக பங்களாதேஷ் பத்திரிகைகள் தவறாக செய்திகள் வெளியிட்டன. அதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை. அங்கிருந்த இளைஞர்களை பொலிஸார் அப்புறப்படுத்தி விட்டனர். இது தொடர்பான காணொலிகள் பொது வெளியில் உள்ளன. அவற்றைப் பார்த்து உண்மையை அறிந்து கொள்ளலாம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இந்தோனேசியாவில் பஸ் விபத்து: சுவரில் மோதியதில் 16 பேர் பலி

இந்தோனேசியாவில் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்ததால் ஏற்பட்ட விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர்.

இந்தோனேசியாவின் மத்திய ஜாவா மாகாணத்தில், பயணிகள் 35 பேரை ஏற்றிச் சென்ற பஸ், திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியின் நடுவே இருந்த தடுப்புச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 6 பயணிகள் உயிரிழந்தனர்.

மேலும் 10 பேர் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால், பலி எண்ணிக்கை 16 ஆக அதிகரித்தது என உள்ளூர் அதி காரிகள் தெரிவித்தனர்.

இந்த பஸ், இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து, யோக்யகர்த்தா நகரத்திற்கு சென்று கொண்டிருந்த போதே விபத்து இடம்பெற்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், விபத்துக்கான காரணம் குறித்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




கனடா முரசு

திங்கட்கிழமை 22/12/2025

**‘பிறப்பு சுற்றுலா’ விகிதங்கள் கனடாவில் மீண்டும் உயர்வு**




02




# பண்டிகைக் காலத்தில் கனடாவில் மோசடிகள் தொடர்பில் எச்சரிக்கை

**பண்டிகைக் காலத்தில் கனடியர்களுக்கு மோசடிகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கனடியர்கள் மோசடிகளால் நூற்றுக் கணக்கான மில்லியன் டொலர்களை இழந்து வருகின்றனர்.**

**ஆனால், விடுமுறை காலங்களில் மக்கள் அவசரம், கவனச்சிதறல் மற்றும் பாதிப்பு நிலை காரணமாக இருப்பதால், இந்த குற்றங்கள் மேலும் அதிகரிப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். கொள்வனவர்கள் கவனம் தளர்ந்த நேரத்தை மோசடியாளர்கள் குறிவைப்ப தாக சைபர் பாதுகாப்பு நிபுணரான டெரி கட்லர் தெரிவிக்கின்றார்.**

மக்கள் வேகமாக வேலைகளை முடிக்க விரும்புகிறார்கள். அதனால், கிளிக் செய்யக்கூடாத இணைப்புகளை 'கிளிக்' செய்து மோசடியில் சிக்குகிறார்கள் என அவர் தெரிவித்தார்.

சலுகைகளை நாடும் வாடிக் கையாளர்களை ஈர்க்க போலி இணையதளங்களை உருவாக்குவதுடன், 'கிப்ட் கார்டுகளையும்' மோசடியாளர்கள் கையாள்கின்றனர் என கட்லர் கூறினார்.

“அசல் பார்கோடு மீது ஸ்டிக்கர் அல்லது வேறு பார்கோடை ஒட்டிவிடுவார்கள். அது மோசடியாளர்கள் முன்கூட்டியே வாங்கிய ‘மாஸ்டர்’ 'கிப்ட் கார்டுடன்' இணைக்கப்பட்டிருக்கும். நீங்கள் காசாளரிடம் 50 டொலர்கள் ஏற்றும்போது, அந்த தொகை உடனடியாக மோசடியாளர்களின் 'கார்டுக்கு' மாற்றப்பட்டு வெற்றிடமாக்கப்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.







# ஒன்றாரியோவில் இடம்பெற்ற கோர விபத்து 3 பேர் மரணம்

ஒன்றாரியோவில் இடம்பெற்ற கோர விபத்துச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒன்டாரியோ நெடுஞ்சாலை 11 இல், இந்த இரு வாகன விபத்து, ஒபசாடிக்கா பகுதியில், சுமார் நள்ளிரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஒரு டிராக்டர்-டிரெய்லர் லொறி மற்றும் ஒரு பிக்கப் லாரி மோதியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பிக்கப் லொறியில் நான்கு பேர் பயணித்திருந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தை ஓட்டிய 41 வயது நபர், உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அதே வாகனத்தில் பயணித்த 41 வயது ஒருவர், 15 வயது சிறுவன், 12 வயது சிறுமி ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

டிராக்டர்-டிரெய்லர் வாகனத்தின் ஓட்டுநருக்கு எந்தக் காயமும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ‘பிறப்பு சுற்றுலா’ விகிதங்கள் கனடாவில் மீண்டும் உயர்வு

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் கடுமையாக குறைந்திருந்த ‘பிறப்பு சுற்றுலா’ விகிதங்கள், தற்போது கனடாவில் மீண்டும் உயர்ந்து வருவதாக புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

புதன்கிழமை வெளியிடப்பட்ட இந்த அறிக்கையின் படி, கனடிய மருத்துவமனைகளில் குடியுரிமை இல்லாதவர்களால் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதில் வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்களும் அடங்குவர். இந்த வகை பிறப்புகள் 2024 இல், தொற்று முன் இருந்த நிலைக்கு மீண்டும் வந்துள்ளதாக அறிக்கை கூறுகிறது.

தற்காலிக குடியிருப்பாளர்கள் அல்லது சுற்றுலா விசாவில் வரும் நபர்கள் தாங்களே மருத்துவச் செலவுகளை ஏற்றுக்கொண்டு பெறும் பிரசவங்களை“non-resident self-pay” என்ற சொல் குறிக்கிறது.

குடியுரிமை இல்லாத அல்லது நிரந்தர குடியிருப்பு இல்லாத பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகள், கனடாவின் மொத்த பிறப்புகளில் மிகவும் குறைந்த பங்கையே வகிக்கின்றன.

2010 முதல் இவ்வகை பிறப்புகள் மொத்தத்தின் 2 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளன என அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

குறைந்தது ஒரு பெற்றோர் கனடிய குடிமகனாகவோ அல்லது நிரந்தர குடியிருப்பாளராகவோ இருந்தாலே பிறப்புரிமை குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற வகையில் சட்டத்தை திருத்த முயற்சிக்கப்பட்டது.

கன்சர்வேட்டிவ் கட்சியின் குடிவரவு விமர்சகரான மிச்சல் ராம்பெல் கார்னர் இந்த முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அந்த திருத்தம் லிபரல் மற்றும் பிளாக் கியூபெக்குவா எம்.பி.க்களால் நிராகரிக்கப்பட்டது. இதன் மூலம் பிறப்புரிமை குடியுரிமை தொடர்ந்து அமுலில் உள்ளது.

# லொட்டரியில் 46 மில்லியன் டொலர்கள் பரிசு வென்றவர்களை தேடும் நிறுவனம்




கனடாவில் 46 மில்லியன் டொலர்கள் பரிசு வென்ற நபரை லொட்டரி நிறுவனம் ஒன்று தேடிக்கொண்டிருக்கிறது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் லொட்டரிச்சீட்டு வாங்கிய ஒருவருக்கு லொட்டரியில் 46 மில்லி யன் டொலர்கள் பரிசு விழுந்துள்ளது.

அந்த அதிர்ஷ்டசாலியை லொட்டரி நிறுவனம் தேடிக்கொண்டிருக்கிறது.

அந்த நபர், குலுக்கல் நடந்த ஒரு ஆண்டுக்குள் தனது பரிசை பெற்றுக்கொள்ள முடியும்.

ஒரு குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்த ஆண்டில் மூன்றாவது முறையாக இவ்வளவு பெரிய தொகை ஒருவருக்கு பரிசாகக் கிடைக்க உள்ளது.